1971 டிசம்பர் 15]

Jute cultivation in Tamil Nadu

* 427 *Q.*—Thiru S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether jute cultivation has been tried in this State;

(*b*) if so, the details thereof; and

(*c*) the steps taken to promote this cultivation?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) & (இ) ஆம். நமது மாநிலத்தில் 1971-72-ல் செங்கை, திருச்சிராப்பள்ளி, தஞ்சை, மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் சில தெரிந்தெடுக்கப்பட்ட தனி உடைமை நிலங்களில் சணல் பயிரிடுவது சோதனைமுறையில் எடுத்துக் கொள்ளப்பட்டது. 10 முதல் 50 சென்டுகள் வரைபரப்பளவுள்ள செயல்விளக்கப் பாத்திகளில் சோதனைக்காக மூன்று ரக சணல் பயிர் செய்யப்பட்டது. உழவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு அவர்கட்கு விதைகள், பூச்சி கொல்லி மருந்துகள், எரு முதலியன இலவசமாக கொடுக்கப்பட்டன.

(உ) இவ்வளவு குறுகிய காலத்தில் நமது மாநிலத்தில் சணல் பயிரிடுவது இயலுமா என்று வரையறுத்துக் கூட இயலவில்லை. நிச்சயமான முடிவு எடுக்க சோதனைகள் மேலும் நடத்தப்பட வேண்டும்.

கோடைக்கானல் பகுதியில் பழம் பதனிடும் பிரிவு

428 வினு.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

கோடைக்கானல் பகுதியில் ஒரு பழம் பதனிடும் தொழிற்சாலை ஏற்படுத்த திட்டம் ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இல்லை.

தொட்டப்பட்டா பகுதியில் ஆப்பிள் மரங்கள் பயிரிடுதல்

* 428 வினு.—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் தொட்டப்பட்டா பகுதியில் ஆப்பிள் மரங்கள் வைத்துப் பயிர் செய்யும் திட்டம் ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா ?

(இ) ஆம் என்றால், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS